**<u>சுருக்கம்</u>**

2008–09–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தமிழ்நாடு மாநில நமக்கு நாமே திட்டம் – வெளிநாடு வாழ் இந்தியர் திட்ட நிதியினை நிர்வகிக்க சங்கம் அமைப்பது தொடர்பாக ஆணை வெளியிடப்பட்டது – சங்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கையினை கைவிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அரசாணை (நிலை) எண்.2 நாள்: 04.01.2011

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.10, ஊ.வ (ம) ஊ. (மாஅதி–1) துறை, நாள் 29.1.2009.
2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.30526/2008/என்இடிஎம்–2, நாள் : 29.11.2010.

*****

ஆணை:

2008–2009ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு எண்.92–ல் வெளிநாடுகளில் வாழும் தமிழ்நாட்டை சேர்ந்தோர் பலரும், தமது சொந்த ஊர் மற்றும் அங்குள்ள மக்களுக்கு பயனளிக்கும் திட்டங்களுக்கு உதவிட விரும்புகின்றனர் எனவும் பொதுமக்கள் பங்களிப்போடு பணிகளை செயல்படுத்துவதற்கான ‘நமக்கு நாமே’ திட்டம் போலவே இவர்களின் நன்கொடை மூலமாக அவர்கள் மேற்கொள்ள விரும்பும் பணிகளைச் செயல்படுத்துவதற்கான பொது அறக்கட்டளை ஒன்றை தமிழக அரசு ஏற்படுத்தும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி அரசு ஆணை (நிலை) எண்.10, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 29.01.2009–ல் தமிழ்நாடு மாநில நமக்கு நாமே திட்டம் வெளிநாடு வாழ் இந்தியர் திட்ட நிதியினை நிர்வகிக்கும் சங்கம் ஏற்படுத்துவது தொடர்பாக கொள்கை அளவில் அரசு முடிவு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தனது 29.11.2010 நாளிட்ட கடிதத்தில், நமக்கு நாமே திட்ட மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை ஆய்வு செய்ததில், திருவண்ணாமலை மாவட்டத்தில் 2007–08ம் ஆண்டில் ரூ.4.05 இலட்சத்தில் இரண்டு பணிகள் மேற்கொண்டதை தவிர வேறு எந்த பணியும் 2007–08 முதல் 2010–11ம் ஆண்டு வரை வெளிநாடு வாழ் இந்தியர்களிடமிருந்து நன்கொடை மூலமாக பெற்று நடைபெறவில்லையென்றும், மேலும் எந்த ஒரு மாவட்டத்தில் இருந்தும் ‘நமக்கு நாமே’ திட்டப் பணிகள் போன்று செயல்படுத்தப்படவில்லை என அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்களின் அறிக்கைகள் வாயிலாக அறியப்படுகிறது என்றும், பொதுமக்கள் பங்களிப்போடு பணிகளை செயல்படுத்துவதற்கான நமக்கு நாமே திட்டம் போன்றே வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தத்தமது ஊரில் தாம் செய்ய விரும்பும் பணிகளைக் குறிப்பிட்டு, அதற்கான கணிசமான தொகையினை நன்கொடையாக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரிடையாக அளித்து அப்பணிகளை அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் படியும் சிறப்புற நிறைவேற்றலாம் என்றும் தெரிவித்து, 2008–09ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பான தமிழ்நாடு

மாநில நமக்கு நாமே திட்டம் – வெளிநாடு வாழ் இந்தியர் திட்ட நிதியினை நிர்வகிக்க சங்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கையினை கைவிடலாம் என்று அரசிற்குப் பரிந்துரைத்துள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் பரிந்துரையினை கவனமாக பரிசீலித்த அரசு, 2008–09 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பு எண்.92–குறித்த தமிழ்நாடு மாநில நமக்கு நாமே திட்டம் – வெளிநாடு வாழ் இந்தியர் திட்ட நிதியினை நிர்வகிக்க சங்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கையினை கைவிட அரசு முடிவு செய்து, அவ்வாறே இதன் மூலம் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை மாவட்டம் தவிர)
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை.
முதன்மைச் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம் (கண்காணிப்பு), சென்னை–9.

<u>நகல்</u>

மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஊவ) துறை, சென்னை – 9.
சட்டத்துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.